# இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு
## கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவு

## வெற்றிடங்கள் – திட்டப் பணியாளர் குழு

புகையிரத செயற்றிறனை மேம்படுத்தும் திட்டம் (REIP) உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களுக்காக திட்ட பணியாளர் குழுவிற்கு ஆட்சேர்ப்பதற்காக 01/2019 இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபத்திற்கு அமைய கொழும்பு புறநகர் புகையிரத செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தத் திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி கடனின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் இலங்கை புகையிரத திணைக்களம் இணைந்து செயற்படுத்துகிறது.

இதன் பிரகாரம் மேற்கூறிய திட்டத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிட பதவிகளை நிரப்புவதற்கு ஆங்கில மொழி தொடர்பில் தேர்ச்சி, அரச சட்ட ஒழுங்குகள் தொடர்பில் பரிச்சயம் மற்றும் வெளிநாட்டு உதவிகளை பெறுகின்ற திட்டத்தின் கீழ் ஆட்களை மீளக் குடியேற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அனுபவம் ஆகிய முன் தேவைகளை பூர்த்தி செய்கின்ற தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பதவி | சம்பள தொகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | உதவி திட்ட பணிப்பாளர் (காணி) | C | 01 |
| 02. | சிரேஷ்ட சமூகப் பாதுகாப்பு அதிகாரி | E | 02 |
| 03. | சமூகப் பாதுகாப்பு அதிகாரி | F | 03 |
| 04. | காணி அதிகாரி | F | 02 |
| 05. | சமூகப் பாதுகாப்பு உதவியாளர் | MN-1 | 02 |

மேற் குறிப்பிடப்பட்ட பதவிகள் தொடர்பில் தகைமைகள்/ அனுபவம் தொடர்பிலான தேவைகள் பின்வருமாறு.

### 01. உதவி திட்ட பணிப்பாளர் (காணி) – பதவி எண்ணிக்கை – 01

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டலுக்கு அமைய பிரதித் திட்ட பணிப்பாளரின் (சமூகப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல்) கீழ் பணிகள்/ செயற்பாடுகளை மேற்கொண்டு திட்டப் பணிப்பாளருக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்பதுடன், திட்டம் தொடர்பில் காணி சுவீகரித்தல் முன்னேற்ற அறிக்கையை தயாரித்தல், மதிப்பீடு மற்றும் காலாண்டு அறிக்கைகளைத் தயாரித்தல், நட்டஈட்டுக் கொடுப்பனவு, சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் சிறந்த ஒருங்கிணைப்பைப் பேணுதல், சுவீகரிக்கப்பட்ட காணி தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் மேற்கொள்ளல் மற்றும் பொறுப்பு வகித்தல் வேண்டும்.

**தேவையான தகைமைகள்**

(பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 தொடரிலக்கத்தில் ஒன்று)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

   மற்றும்

   துறையுடன் தொடர்புடைய பட்டப் பின்படிப்பு (முதுமாணி) பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   அத்துடன்

   தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 13 வருட சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
2. துறையுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை / முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   அத்துடன்

   காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 10 வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
3. துறையுடன் தொடர்புடைய நாடளாவிய அரச சேவையில் 1ஆம் வகுப்பு அல்லது அதற்குச் சமமான மட்டத்தில் அதிகாரியொருவராக இருத்தல்.

   மற்றும்

   துறையுடன் தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

   அத்துடன்

   நாடளாவிய அரச சேவையில் 1ஆம் வகுப்பில் 05 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

### 02. சிரேஷ்ட சமூகப் பாதுகாப்பு அதிகாரி – பதவி எண்ணிக்கை – 02

பிரதித் திட்டப் பணிப்பாளரின் (சுற்றாடல் மற்றும் சமூகப் பாதுகாப்பு) கீழ் பணி/ நிலைகளை மேற்கொண்டு திட்டத்தை செயற்படுத்துவதற்கு இயைபாக சமூக பாதுகாப்புத் திட்டங்களை தயாரித்தல், முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டலுக்கு அமைய காலாண்டு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் உதவி செயற்றிட்டப் பணிப்பாளரினால் (சமூகப் பாதுகாப்பு) ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுதல்

**தேவையான தகைமைகள்**

(பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 03 தொடரிலக்கத்தில் ஒன்று)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் குறித்த துறையில் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 06 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

   அல்லது
2. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 07ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 06 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

   அல்லது
3. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 11 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்
4. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 05 மட்டத்திற்குள் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 16 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

### 03. சமூகப் பாதுகாப்பு அதிகாரி – பதவி எண்ணிக்கை – 03

பிரதித் திட்டப் பணிப்பாளரின் (சுற்றாடல் மற்றும் சமூகப் பாதுகாப்பு) கீழ் சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுதல், சமூகப் பாதுகாப்பு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், மீள் குடியேற்ற நடவடிக்கைகளைக் கண்காணித்து அறிக்கை தயாரித்தல், சமூகப் பாதுகாப்பு பிரச்சினைகளைத் தீர்த்தல்.

**தேவையான தகைமைகள்**

(பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 03 தொடரிலக்கத்தில் ஒன்று)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் குறித்த துறையில் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 04 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்
2. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 07ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 04 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

   அல்லது
3. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 09 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்
4. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 05 மட்டத்திற்குள் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 14 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

### 04. காணி அதிகாரி – பதவி எண்ணிக்கை – 02

பிரதித் திட்டப் பணிப்பாளரின் (காணி) கீழ் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் ஒப்படைக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுதல், காணி சுவீகரிப்பு முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல், நில அளவைத் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகத்துடன் ஒருங்கிணைந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு அரச காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம் கடமை மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுதல்

**தேவையான தகைமைகள்**

(பின்வரும் 01 அல்லது 02 அல்லது 03 அல்லது 03 தொடரிலக்கத்தில் ஒன்று)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் குறித்த துறையில் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 04 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்
2. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 07ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 04 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

   அல்லது
3. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 06 மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 09 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்
4. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றினால் வழங்கப்படும் தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 05 மட்டத்திற்குள் குறையாத தேர்ச்சி தொடர்பில் சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல்.

   அத்துடன்

   காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் குறைந்தபட்சம் 14 வருடகால சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

### 05. சமூகப் பாதுகாப்பு உதவியாளர் - பதவி எண்ணிக்கை 02

பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் (சுற்றாடல் மற்றும் சமூகப் பாதுகாப்பு) பணி/ நிலைகளை மேற்கொண்டு சமூகப் பாதுகாப்பு தொடர்பாக ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுதல்.

**தேவையான தகைமைகள்:**

க.பொ.த (உயர்தர) பரீட்சையில் 01 பாடத்தில் திறமைச் சித்தியுடன் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

இந்தப் பதவிகளுக்கு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அடிப்படைச் சம்பளத்தின் 50% கொடுப்பனவொன்று உரித்தாகும்.

**சம்பள அளவு:**

C தொகுதி ரூபா 285,000.00 - 305,000.00

E தொகுதி ரூபா 170,000.00 - 185,000.00

F தொகுதி ரூபா 120,000.00 - 135,000.00

MN-1 ரூபா 27140 - 10x300 - 11x350 - 10x495 - 10x660 - 45540.00

**பொது நிபந்தனைகள்:**

1. வயதெல்லை. அனைத்து விண்ணப்பதாரர்களும் 64 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும். (64 வயதுக்கு மேற்பட்டவர்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டார்கள்).
2. ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பங்களிப்பு (ஊழியர்களிடம் 8% மற்றும் தொழில் வழங்குநரிடம் 12%).
3. சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் நிபந்தனைகள்: ஆரம்பத்தில் இந்த நியமனம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு (01) வருடத்திற்கானது என்பதுடன், திருப்திகரமான செயற்றிறன் மற்றும் திட்டக் கால வரம்பு அடிப்படையில் சேவைக் காலத்தை நீடித்துக்கொள்ளலாம்.

**விண்ணப்பம்:**

மேற் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தமது கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் குறித்த துறைகளில் அனுபவம் தொடர்பில் விபரம் மற்றும் உறவினர் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் விபரங்களைக் காட்டும் விண்ணப்பங்களை 2026.03.16ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு திட்டப் பணிப்பாளர், புகையிரத செயற்றிறனை மேம்படுத்தும் திட்டம், இல. 217, கொட்டா வீதி, கொழும்பு 08 என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.

அரச சேவை/ அரச சார்பு சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம்**
**இல. 217, கொட்டா வீதி, கொழும்பு 08.**

**2026.03.02.**